உ

கடவுள் துணை.




# மன்மதன் எரிந்தகக்ஷி லாவணி.

———:o:———

இஃது

திரிசிரபுரம் பெரிய பஜார் வாணக்கடை

ம-ா-ஸ்ரீ அருள்வாக்கு துரைசாமி நாவலரவர்கள்

இயற்றிய பாடல்களை

இதுவரையில் வெளியிடாதிருந்ததை முன்னிட்டு

நாகை M. வேணுகோபால் நாயுடு அவர்கள்

திரிசிரபுரம் எரிந்த கக்ஷி

V. M. சாமிநாதபிள்ளை அவர்கள்

இவ்விருவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி

ஷை துரைசாமி நாவலரவர்களின் பிரதம மாணாக்கராகிய

நாகை ந. ராமசாமி பிள்ளையவர்களால்

நாகபட்டணம்

ஸ்ரீல[illegible] வச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

———

1914.

Q23:417
N14
125118

உ

சிவமயம்.

MADRAS.



# மன்மதன் எரிந்த கக்ஷி லாவணி.

## வினாயகர்துதி.

### விருத்தம்.

பிரணவமே உருவவடி வானபர ஞானவொளி
பிர்ம்மாண்ட வாரண முகா
பேசுமறை நான்கதனில் நடனமிடும் ஒய்யார
பிரளய நிரா தாரனே
தருணமதில் எந்தனைவிட் டகலாமல் உடனுயிர்போல்
தற்கார்த் தருள் புரியவே
சாஷ்டாங்க மாகதினம் நமஸ்கரித்தேன் களிகூர்
சாம்பசிவ நெற்றி விழியால்
மரணமடை உடலன்னில் உயிர்பழுதில் லாததோர்
மால்மதன் காதை விரிவாய்
வையகந் தனில்வித்வ கனவான்கள் சபையிலே
மழைபொழிய செய்ய முகிலே
நறநறன பல்லையவர் கிட்டிபுஜங் தட்டிஒரு
உள்ட்டியவரேகியே நளிர்மதனு மெரியாமெனன
நாடியென்முன்வரு காமல்பாடும்மொழி தவறுவரம்நின்
அன்பன்துரை சாமிக் கருளே.

லாவணி.

ஆனந்தகணனே அகிலநிற்குணனே
மோனநாயகனே மூஷிகனே
தேனார்ஞான செல்வசிங்காரா
தேவா மூவா திருவே ஒய்யாரா. (ஆனந்)

வல்லபைத்தோளா வரந்தரும்தாளா
நல்லுமைபாலா ஞாலாலாலா
சொல்லாவில்லை சுரர் பணிமுதலே
ஜோதிஆதி தோன்றிலாவதிலே (ஆனந்)

வாசியையடக்கி மமதையையொடுக்கி
நேசிகால்முடக்கி நிலையாக்கி
காசிதூசி கடவொழிக்காகா
கருத்தைத்திருத்தி கதிதரும்யோகா (ஆனந்)

இல்லறம்யாதும் இனிசுகம்போதும்
தொல்லையென்றோதும் சுகாமுனிசாதும்
கொல்லாநல்லோர் குணம்பெருங்குன்றே
கோமான்சீமான் துரைசாமியின்றே. (ஆனந்)

## குருவணக்கம்.

---

விருத்தம்.

சங்கினங்கள் செங்நெல்வயல் கரைதவிழ்ந்து தாளமெனும் மகவை யங்கே சார்ந்து சேற்றில், தனிக்கலவை குழம்புமடை சாய்ந்துளவர் பகடின் வால் நனைத்துமணி மன்றல் சார்ந்து, அங்குமிங்கும் வீசுவதால் சிதறிவடம் ஒழுங் அருக்கன்முகங்கோட்டி அதிசயித்தான், அழிகளெல்லாம்வாசங்கண்டு அலரிமொய்ப்ப அயர்ந்து வெட்கி, பொங்குமுகில் தனைவேண்டி தவம்புரியும் வண்டினங்கள் பொழியமாரி, பொன்னாட்டுச் சோழனவன் புண்ணியத்தால் திருசைநகர் போந்துகார்த்தான், எங்கள்குரு துரைசாமி அதில் வசிக்க நாங்களெல்லாம் அவரிணையடியை, ஏற்றிமதனைரிந்ததாக இயம்பலுற்றேன் பயமகற்றி யிதுசமயம் வருகவென இறைஞ்சினேனே.

லாவணி.

மாதவமே ஒருருவாய் வந்த எந்தனாசானே
மனதிலே துதித்தேனிப்போ வரமருளுமீசனே

காதலான வேள்கதைக் கடற்பிறவாகக் கேணியோ
சமலபீடமீதமர்ந்து கலைகள்சொல்லும் வாணியோ
வேதநாத போதகப்பிர சங்கவித்வ சிங்கமே
விண்ணுளோர் மதிக்கும்ஞான மேருவான தங்கமே

உத்தார் ஆதலால் நம்பினேன் நின் னருளிலாமல் வெம்பினேன்
பாதமேகெதி நாதனே கதி
சோதனைசெய்யாமல் அன்பர் சொற்சுவைக்குகந்தவா (மாத)

பஞ்சலட்சண முணர்ந்த பாவலர் சபையிலே
பாடவந்தே னுன்னருளை பகருவீர் செவியிலே
அஞ்சாமல் எரியானென்று ஆட்சேபிக்க வெண்ணினால்
அவர்களோடு கிருபைநோக்கம் அளியுங்கடைக் கண்ணினால்
கஞ்சமா மலர்வதன கர்ப்பக விமானமே
கருணைகூர் சமாதியோக கவலைகொள்ளும் மௌனமே

உத்தார் தஞ்சமென்று உன்னையே சதாவும் நம்புமென்னையே
கிஞ்சிற்றும்நீரே கிருபைசெய்வீரே
வஞ்சகர் மனத்தகத்தை வத்தல்பத்த லாகச்செய் (மாத)

துரியாதீத வழியிலேறி ஷோக்கிநிற்கும் வல்லவா
ஸ்தூலதிரேக மாயிருந்த சூட்சமும்நீ யல்லவா
அறியாதேது தெரியாதேது அவனும்நீயு மொன்றல்லோ
அத்வைதக் கடல்கடைந்த அம்சதூளிமன்றலோ
பொறிபுலன்க ளும்மொடுங்க பூதமைந்திலோடுவீர்
பொய்யர்தன் மனத்தைவெட்டி பூசைபோட நாடுவீர்

உத்தார் விரித்துரைசெய் நாதனே வேதாந்தசெய்யுள் கீதனே
சரிதைமார்க்கமே சாயுச்சியதீர்க்கமே
பெரியோர் வாய்மொழிக்கிசைந்த பிர்மானுச்ச சேகரா. (மா)

திருவளரும் திரிசைமா நகரிலமர் செல்வனே
தேசதேச மெங்கும்வாசம் வீசும்வாச லாவனே
அருள்பழுத்த துரைசாமி அவர்கள்நாமம் சிரசிலே
அமர்த்தும் ராமசாமிமுன்பு அன்பாய்வாரும் விரசிலே
இருள்வினை யெனைத்தொடாமல் இன்பம்வைத் தருளுவீர்
எதிரிமுன்பு காட்டிகொடுக்க எண்ணம்சற்று வையாதீர்

உத்தார் மறுஜெனனம் எவ்வாறு வந்துகாட்சி தருவீரோ
சரசமாகவே சங்கைபோகவே
கருசன்தோ டெந்தனுவில் கலைகள்சொல்லும்மௌனமே. ()

விருத்தம்.

தமிழமுர்தப் பெருங்கடலைத் தாளியாக்கி தத்துவவேதாந்த மத்தை தானாய் நட்டு, கமிழ்விரியும் மெஞ்ஞான கயிற்றைப்பூட்டி கம்பமசையாத வண்ணம் கருத்திலூன்றி சிமிழ் மூலையோன் படைமாரன் சிறப்பை நன்றாய்க்கடைந்தெடுத்துச் செப்பலுற்றேன், உமிழ்ந்திடவும் உங்கள் மனம் ஒதுங்காதென்றே உறங்கொண்டோர்க் கிதுவெல்லாம் உண்மையாமே.

## ரதி மன்மதன் பிறப்பு.

சதுர்மறையா யந்த தமிழ்வல்லோரே சாற்றுகிறேன் ரதி பிறந்த கதை
சபையிலெடுத்து யான் உபயோகிக்க மனம் தளறுதேயாகிலும் கேளுமிதை
அதிர்வன சாமருக்கு எஜீசு அதன்பின் ஐந்தாம் பாரதமே
ஆதிபருவமதி லோதியசேதி அனைவோரறிவார் நீரதமே
மதுரமாமிது மந்திரகிரியை மத்தாக பொருத்திய அந்த நாளையிலே
மாபெரும் பாற்கடல் தாளியதாக்கி வாசுகிகயிராய் வேளையிலே
சதுர்பெரும் வானோர் ஒருபுறமாகத் தாண்டிய அசுரரும் நிறைந்த கதை
சபையிலெடுத்துயான் உபயோகிக்கமனம் தளருதேயாகிலும் கேளுமிதை.()

அசையா திருக்கக்கீழ் ஆமையொன்றேந்தி அதன்மேல் மாயவரமர்ந்தாரே
அமிர்தங் கடையயில் ஆதிசேடனும் அவஸ்தை பொறுக்காமலே பறந்தாரே
விஷமுண்டதால் சிவன் நீலகண்டனாய் விளங்கிய காரணமிதுதானே
விரைவாயதனில் பிறந்தவர் பெயரை விரித்துரைப்பேன் கேள் சீமானே
திசையொரும் புகழ் சந்திரன் அஸ்வம் தேவதாரி ரதி மூத்தாளும் [மேலும்
திகழ்வெள்ளையானையும் மலர்மகிழ் சிலது ஜெனித்தார் ஜெனித்தார் மென்
தசைமிகு ஒளியால் ரதியைக்கண் டரக்கர் தாவபரசிவன் கைபிடித்ததை
சபையிலெடுத்துயான் உபயோகிக்கமனம் தளருதேயாகிலும் கேளுமிதை ()

அந்தசமயமதில் அரனை அடைக்கலமென் றடுத்தாள் ரதியை மகளாக்கி
அதுமுதல் உமையா ளவளிடம் வளர்ந்து அருவையிருவருமாய் ருதுவாகி
இந்தப்படிக்கி இவ்வரலாறிருக்கையில் யெம்பெருமாள் திருமார் பதிலே
இசைமலர் பாணம் விசைதரும் நாணும் இதுவொரு பிறந்தார் மதவேளை

விந்தையதாய் மதன் ரதிக்கு விவாகம் முடிந்தது மேருமலையோரம்
மீனலெக்கினம் நாளோ திங்களாம் இருவர்பொருத்தம் அதுபாரும்
சந்ததம்புகழ் துவாபர யுகமாம் தரித்தது மன்மத வருடமதை
சபையிலெடுத்துயான் உபயோகிக்கமனம் தளருதேயாகிலும் கேளுமிதை ()

நாரதமச்சக் கூர்மபுராணம் நளகிக உபநிடதம் பார்த்து
நவிலுமோர் காந்தம் மாதேவச்சுருக்கம் நல்வழி பாகவதம் சேர்த்து
சீரதவால்மீகி சிலபல நந்நூல் சித்தரும் சொன்னது தெளிவாக
சிறுகண் துணியால் சிதராமல் வடித்து செப்பினேன் யிப்போது மனமார
பூரதம்போல்கவி ஜோடித்து புதுசாய்போட்டேன்கேட்ட வரெகுநந்தனு
புண்ணியவான்துரை சாமித்திருவடியை போற்றி எடுத்தேன்கையில் டேப்பு
சாரதபீக்ஷ சடாக்ஷரம் ஓமெனும் சர்வம் நிர்வி காரமதை [துந்தனு
சபையிலெடுத்துயான் உபயோகிக்கமனம் தளருதேயாகிலும் கேளுமிதை ()

லாவணி.

வடவைக்கனலையுந்தன் கடைவாயினிலடக்கி வாலிங்கே நீட்டாதே
பூச்சிகாட்டாதே கோபமூட்டாதே கவனம்வை
வழுத்தும்சொல் பிறட்டாதே
புடவையில்லாதமங்கைபோலுமுன்செயலெல்லாம் போதும் நிறுத்தும்பாட்டு
விடையைக்கேட்டு மூக்காடுபோட்டு ஓடாதேபுகழ்
சொல்லிக் கம்பிநீட்டு
தடவைக்கிரண்டுவிசை தட்டமிலாரைப்பற்றி சவுக்கடிகொடுத்திருந்தும்
சபைக்குத்தெரிந்தும் உலகமறிந்தும் விவேகமில்லாத்
தனமருக்குத்தான் பொருந்தும்

உத்தார் நடவுநட்டாலும் விளையாதே நீங்கள்
நவின்றமொழிக்கு களைக்காதே
மடமையைநீக்கி உன்னை திடமாக்கினறென்குரு மகிமையை சாட்டாதே
பூச்சிகாட்டாதே கோபமூட்டாதே கவனம்வை வழுத்தும்சொல்பிறட்டாதே

கொச்சகம்.

திங்களைத்தரித்த யீசன் முன்புசென்ற மாரனை
பொங்குங் கோபத்தாலெரித்த புதுமைகாணப் பண்டிகை
அங்கமேஒரு லிங்கமாய்வரு அன்றுதொட்டு இன்றுநாள்
எங்குமே கொண்டாடிநிற்கும இன்னம்கேளும் சொல்லுவேன், ()

பேய்க்கரும்பல்லவோகாண் ஆக்கைக்குள்ளேவளரும் பிடரியின்ருதுசெலும்பு
கருவிசிலம்பு மனத்தையலம்பு கெருவிக்காதே
பெரியோரை நம்பிப்புலம்பு
வாய்க்குண்டோவாதம்போல் வரையாதேயறைகுவேன் வைக்கல்நரம்புசாக்ஷி
விடாதேமூச்சு இப்படிக்காச்சு ஞானவெட்டி
வள்ளுவர் சொன்னபேச்சு
மாய்ந்துவிடுமேயந்த மாமிசையெருமுட்டை மார்க்கந்தெரியாப்பாவி
கொடுத்தேன்சாவி அலறிக்கூவி பயந்ததிற்கு
மந்திரித்துக் கொள்போபாவி

உத்தார் பாயறியாது பசிபாகம் பஞ்ச
பாணனுடல் சமதையாகும்
ஆய்ந்தவர்செவிக்கிது அமிர்தம்போலே விளங்கும் அகமணம் பூட்டாதே
பூச்சிகாட்டாதே கோபமூட்டாதே கவனம்வை வழுத்தும்சொல்பிறட்டாதே

கொச்சகம்.

அந்நாளிலிருந்த யுத்தி அனுபோசமாய் வந்தது
இந்நாளிலும் அவ்வாருக எங்கும்நட்டு விட்டதே
கண்ணுளியோ அவர்க்குமுந்தி கற்பகோடி காலமாய்
புண்ணுளியாய் வந்தவாநீ புத்திக்காய் வாயைப்பொத்திக்கொள் ()

எங்கேமனம்லகித்து இருந்தவிடங்கயிலை எவ்விடம் நட்டாலென்ன
உனக்கார்சொன்ன தெய்வத்துக்கென்ன முறையுண்டோகாண்
எரிபட்டவனுக் கென்ன
துங்கமதனெழுந்தான்லிங்கம்பிடித்துவைத்தோம்சுடுகொட்டுக்கிரிகைபோலே
வேறென்னசெயலே படைத்ததாலே பெரியவனே
சொல்லுங்காஎன் ஒருக்காலே
அங்கமிழக்கும்போது அதனுள்வடிந்தரெத்தம் அணிந்தகுலாலுமல்லவா
சிநேகனல்லவா ஆகிலும்புலவா யானுமக்கு
அறிவிக்கும்கேள்வி உனதல்லவா

உத்தார் சங்கை உமக்கிருந்தால் பாடு புராண
சரித்திரமிதை காதில்போடு
வங்கையுன்மேலேவைத்து யிருந்தேனே வெகுநாளாய் வாய்த்ததுசாட்டாதே
பூச்சிகாட்டாதே கோபமூட்டாதே கவனம்வை வழுத்தும்சொல்பிறட்டாதே

கொசசகம்.

இனிமேலிந்த கேழ்விகேட்க எண்ணுவையோ சொல்லுவீர்
பணிதல்செய்து வாயைமூடி பக்கம்வந்து சொக்குமே
துணியைமூஞ்சில் போட்டநாக சூழ்ந்துதேஉன் ஊழ்வினை
முனியனெங்கே முடவனெங்கே மூர்க்கனெங்கே பார்க்கலாம். ()

ஒருவனிந்தித்தாலந்த குருவும்பலபிள்ளையை ஓதுகசும் வழக்கமுண்டா
எங்கேநூல்கொண்டா போடுவேன்ஜண்டா பதினெட்டாண்டு
உழைத்ததும் வீண்போவதுண்டா
நருமலர்கமழ்விரி திரிசிராபுரநகர் நவமணி துரைசாமி
சீஷநாமி ராமசாமி ஜெயம்பெறவே
நாட்டும்கொடியயைக் காமி
எரியலையெனமொழி புரியும் கவிவாணரை யேப்பம் போடவேத்தானே
புறப்பட்டேனே சிங்கம்நானே மனதிலே
எழுதிவை சீமானே

உத்தார் கருவினில் உருவாகும்போது அந்த
கபடம் உனக்குத் தெரியாது
மருவியணைந்தாலுன்னை வாயாலெடுக்கவரும் மணமில்லை சூட்டாதே
பூச்சிகாட்டாதே கோபமூட்டாதே கவனம்வை வழுத்தும்சொல்பிறட்டாதே

விருத்தம்.

கானகமா மாய்கையதை களைந்த நந்தக் கலைமாரி முகில் பொழியக் கனிந்து உள்ளே, மானபிமானமெனும் கலப்பை மாந்தி மனதடங்கா தெரு துகளை மாட்டியோட்டித், தானகவுழுதுபரம் படித்துத் தண்ணீர் தடை யிலா மடைதிறக்கச் சாயாவண்ணம், ஞா[illegible]ரை முளைவீசி நாத்துண்டாக்க நவின்றூர்காண் துரைசாமிஞதனுதன்..

லாவணி.

(காவடிச்சிந்து வர்ணமெட்டு)

வேதாந்தமெல்லாந் திறட்டிப்பந்தாக விளையாடி என்முன் வந்தோரே
கவிஞோரே புலவீரே இந்த
வீரகண்டாமணித் தீரத்தனமுற்றும் விளம்புவேன் செவிகொடுப்பீரே

(முடுகு) விந்தானது இந்தாவுடல் செந்தீயினல் நொந்துவரும்
வெள்ளையானதென் னகூறே கவிஞோரே புலவீரே இந்த
வீரகண்டாமணித் தீரத்தன[illegible]ற்றும் விளம்புவிவேன் செவிகொடுப்பீரே. ()

தங்களைப்போலே பிறட்டாகப்பாடிநான் சந்திசிரிக்கவே மாட்டேன்
பொய்யைச்சூட்டேன் விடமாட்டேன் உங்கள்
சந்தேகந்தீரவே கந்தபுராணத்தில் சாட்சியேசொல்விநான்போட்டேன்

(முடுகு) சரமாரியாய் கறைவேகமாய் துரைமார்களும் பறவாயிலை
சந்தோஷங்கொண்டாடுவாரே கவிஞோரே புலவீரே இந்த
வீரகண்டாமணித் தீரத்தனமுற்றும் விளம்புவேன் செவிகொடுப்பீரே. ()

கஞ்சாஅபினி மதுவைக்குடித்துமே கண்மூடி சித்தர்நூல் தள்ளு
புராணம் சொல்லு என்னை வெல்லு அந்த
காமனாலேபட்டு கெட்டவர்கோடிகாண் கதைசொல்லவேண்டுமோபுல்லு

(முடுகு) காமன்கனை சோமன்தரு பூமண்டல சாபத்தினை
கங்காதரன் மேனிகூறே கவிஞோரே புலவீரே இந்த
வீரகண்டாமணித் தீரத்தனமுற்றும் விளம்புவேன் செவிகொடுப்பீரே. ()

மாதுளைசம்பங்கி தாதுளை ஷெண்பகம் மந்தாரை வெட்டிவேர் சூட
கீதம்பாட மாதராட அந்த
மாரன்துரைசாமி பார சிம்மாசனம் மருகிவா ஷாமரைபோட

(முடுகு) மாதந்தனில் வேதத்திலே பேதம்சொல்ல தீதாகுமா
மங்கைமதி யுணர்ந்தோரே கவிஞோரே புவவீரே இந்த
வீரகண்டாமணித் தீரத்தனமுற்றும் விளம்புவேன் செவிகொடுப்பீரே. ()

---